**முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**

முன்னிலை : திருமதி.V. ஸ்ரீ வித்யா , எம்.எல்.,
முதன்மை உதவி அமர்வு நீதிபதி, திருப்பூர்

(2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள் வெள்ளிக்கிழமை)

(2057– திருவள்ளுவராண்டு – விசுவாவசு ஆண்டு – மாசி திங்கள் 29–ம் நாள்)

**அமர்வு வழக்கு எண்.61/2024**
(**TNTI04–000549–2024**)

Cr.No.2404/2010, Mangalam Police Station
(P.R.C.No.33/2014, Judicial Magistrate No.II, Court, Tiruppur)

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக<br>காவல் ஆய்வாளர்,<br>நல்லூர் காவல் நிலையம்,<br>திருப்பூர். |
| குற்ற எண் | : | 2404/2010 |
| எதிரிகளின் பெயர்கள் | : | 1) முத்து (எ) முத்துக்குமார் (1ம் எதிரி) , 28,<br>த/பெ. முத்துராமலிங்கம்,<br>6.13, சர்ச் வீதி, பிள்ளைவிளை,<br>எழுவரைமுக்கி, சாத்தான்குளம், தூத்துக்குடி<br><br>2) மணிகண்டன் (3ம் எதிரி), 23, த/பெ. வேலு,<br>தட்சுமொழித் தெரு, சாத்தான்குளம்,<br>தூத்துக்குடி<br><br>3) மணிகண்டன்(7ம் எதிரி) (இறந்துவிட்டார்),<br>29, த/பெ. ராமகிருஷ்ணன், 135 நடுத்தெரு,<br>நந்தன்தட்டை, பாப்பாங்குளி, திருநெல்வேலி<br><br>4) முத்தையா (9ம் எதிரி), 23,<br>த/பெ. லட்சுமணன், வெல்லூர்,<br>ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி |

| | |
|---|---|
| எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் | : 1 மற்றும் 3ம் எதிரிகளின் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 307 மற்றும் 307 உ/இ, 149–ன் கீழும், 9ம் எதிரியின் மீது பிரிவுகள் 147, 148 307 உ/இ, 149–ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் உரை | : எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என தெரிவித்தார்கள். |
| நீதிமன்ற முடிவு | : இறுதியில், அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நீருபிக்கவில்லை என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளதால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, 1 மற்றும் 3ம் எதிரிகளின் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 307 மற்றும் 307 உ/இ, 149–ன் கீழும், 9ம் எதிரியின் மீது பிரிவுகள் 147, 148 307 உ/இ, 149–ன் கீழும் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து குவிமுச 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. சான்று பொருட்கள் குறித்த உத்தரவு தாய் வழக்கான அமர்வு வழக்கு எண். 246/2023 வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ளது. |
| எதிரிகள் சிறையிலிருந்த காலம் | : 1ம் எதிரி<br>3ம் எதிரி<br>9ம் எதிரி |

| | | |
|---|---|---|
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 03.05.2013 |
| கு.வி.முச பிரிவுகள் 228,240,246 மற்றும் 251 ன் கீழ் எதிரிகள் விசாரிக்கப்பட்ட நாள் | : | 06.09.2024 |
| எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | – |

சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள் :

| சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| PW.1 | 09.03.2026 | 09.03.2026 |
| PW.2 | 09.03.2026 | 09.03.2026 |

| | | |
|---|---|---|
| பிரிவு 313 ன் கீழ் எதிரிகள் விசாரணை செய்யப்பட்ட தேதி | : | 13.03.2026 |
| எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் தலைமறைவாக இருந்திருப்பின் அதன் விபரம் | : | – |
| நீதிமன்றங்களில் தடை உத்தரவு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டதா, தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அதன் முடிவு | : | – |

அமர்வு வழக்கு எண்கள். 246/2023 மற்றும் 61/2024 என்ற இரு அமர்வு வழக்குகளும் இன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றவியல் வழக்கறிஞர் திரு. பஷீர் அகமது அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. பி, கருணாநிதி அவர்கள் முன்னிலையாகியும், 7 ஆம் எதிரி இறந்து விட்ட நிலையிலும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாக பரிசீலனை செய்து இருதரப்பு வாதங்களையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**பொதுவான தீர்ப்புரை**</u>

1. கடந்த 05.11.2010 ம் தேதி சுமார் 10.30 மணிக்கு இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியான இளையராஜாவும் சாட்சி உதயகுமாரும் மங்கலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட குளத்துப்புதூர் மகாராணி டையிங் கம்பெனி அருகே வரும் போது அங்கிருந்த ஆஜர் எதிரிகளில் சிலர் பீர் பாட்டில்களை ரோட்டில் போட்டு உடைத்ததை தட்டிக் கேட்டதால் எழுந்த முன் விரோதம் காரணமாக மேற்கண்ட இடத்திற்கு அன்று (05.11.2010 ம் தேதி) இரவு சுமார் 10.45 மணிக்கு தொலைந்து போன தனது ரசீதுகளை சாட்சிகள் இளையராஜாவும், உதயகுமாரும் தேடி அதே இடத்துக்கு வந்த போது எதிரிகள் அனைவரும் கொடிய ஆயுதங்களான கத்தி, பீர் பாட்டில்கள் ஆகியவற்றுடன் சட்ட விரோதமாக ஒன்று கூடி வந்து சாட்சி இளையராஜாவை கொலை செய்து விட வேண்டும் என்ற எண்ணத்தோடும். தாங்கள் செய்கின்ற குற்றச் செயல்களால் சாட்சி இளையராஜாவிற்கு இறப்பு நேரிடின் தாங்கள் கொலை செய்த குற்றத்திற்கு ஆளாவோம் என்ற உண்மை நன்கு தெரிந்திருந்தும்/ முதல் எதிரி முத்து (எ) முத்துக்குமார் சாட்சி இளையராஜாவை பார்த்து இவனை குத்திக் கொல்லுங்கடா" திருநெல்வேலிக் காரன்னா யாருன்னு தெரியட்டும்' என்று சொல்லி உடைந்த பீர் பாட்டிலால் இளையராஜாவின் இடது தோள், இடது மேல் கை, இடது வயிறு ஆகிய இடங்களில் குத்திக் காயப்படுத்தியும், இரண்டாவது எதிரி துரை இளையராஜாவை பார்த்து "செத்து தொலை " என்று வலது வயிறு, இடது மார்பு, அல்லை ஆகிய இடங்களில் கத்தியால் குத்திக் காயப்படுத்தியும், மூன்றாவது எதிரி மணிகண்டன்

உடைந்த பீர் பாட்டிலால் வலது கண் புருவத்திலும், வலது மார்பின் மேல் பகுதியிலும் குத்திக் காயப்படுத்தியும், 4 வது எதிரி முதல் 10 வது எதிரி வரையுள்ளவர்கள் இளையராஜாவைப் பார்த்து "சாகுடா, சாகுடா" என்று சொல்லி கையாலும், காலாலும் சாட்சி இளையராஜாவின் உடலின் பல பாகங்களில் இடித்துக் காயப்படுத்தியும் கொலை முயற்சி செய்துள்ளமையால் முதல் மூன்று எதிரிகளும் இ.த.ச பிரிவுகள் 147, 148, 307 ன் கீழும் 4 வது எதிரி முதல் 10 வது எதிரி வரை உள்ளவர்கள் இ.த.ச பிரிவுகள் 147, 148, 307 உ/இ. 149 பிரிவுகளின் கீழும் தண்டிக்கப்படத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளார்கள் என்று மங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் குற்றப்பத்திக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் மங்கலம் காவல் நிலைய, காவல் ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட குற்ற பத்திரிக்கையை திருப்பூர், குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம் திருப்பூர், அவர்களால் கோப்புக்கு எடுக்கப்பட்டு, முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.33/2014 ஆக எண்ணிடப்பட்டு, அதன்பிறகு எதிரிகளுக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச.207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. குற்றப்பத்திரிக்கையில் கண்ட 1, 3, 7 மற்றும் 9ம் எதிரிகள் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 2, திருப்பூர் நீதிமன்றத்தின் முன்பு ஆஜராகாமல் அவர்களுக்கு எதிராக பிடிகட்டளை நிலுவையிலிருந்த நிலையில் அவர்களுக்கு எதிரான முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண். 92/2023 ஆக பிரித்தெடுக்கப்பட்டும், 2,4,5,6,8 மற்றும் 8ம் எதிரிகளைப் பொறுத்த வரையில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.33/2014 ஆகக் கோப்புக்கு எடுக்கப்பட்டும், எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் ஒருவரை கொலை செய்ய முயற்சி என்று குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.4 தீர்மானித்து எதிரிகள் மீது 307 IPC பிரிவின் கீழ் விசாரிக்கத்தக்க குற்றமாக இருப்பதாக தீர்மானித்து அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படக்கூடியதாக இருக்கின்ற காரணத்தினால் நீதித்துறை நடுவர் எண்.2 திருப்பூர் அவர்களால் மேல் நடவடிக்கைக்காக, முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்கள். 33/2014 மற்றும் 92/2023 ஆகிய இரு வழக்குகளையும் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு

நீதிமன்றம், திருப்பூர் அவர்களுக்கு கு.வி.மு.ச பிரிவு 209(அ) –ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில், மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருப்பூர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில் 2, 4, 5, 6, 8 மற்றும் 10ம் எதிரிகளின் மீதான வழக்கு அமர்வு வழக்கு எண்.246/2023 ஆகவும், 1, 3, 7 மற்றும் 9ம் எதிரிகளின் மீதான வழக்கு அமர்வு வழக்கு எண். 61/2024 ஆகவும் கோப்புக்கு எடுக்கப்பட்டு, மேல் நடவடிக்கைக்காக இந்நீதிமன்றத்திற்கு வரப்பெற்று, கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது.

3. அமர்வு வழக்கு எண்கள். 246/2023 மற்றும் 61/2024 வழக்கின் எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு வனைவது தொடர்பாக, இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞரின் வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும், இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின், எதிரிகள் வழக்கில் கூறியுள்ள குற்றம் புரிந்துள்ளதாக அனுமானிக்க முதற்தோற்ற வழக்கு முகாந்திரம் உள்ளதாக, இந்நீதிமன்றம் கருதியுள்ளதால், 2ம் எதிரியின் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 307–ன் கீழும், 4,5,6,8 மற்றும் 10ம் எதிரிகளின் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 307 உ/இ. 149 ன் கீழும், 1 மற்றும் 3ம் எதிரிகளின் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 307 மற்றும் 307 உ/இ, 149–ன் கீழும், 9ம் எதிரியின் மீது பிரிவுகள் 147, 148 307 உ/இ, 149–ன் கீழும் எழுத்துமூலமான குற்றச்சாட்டுகள் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளது. மேற்படி எதிரிகள் குற்றச்சாட்டின் தன்மையை புரிந்து கொள்ளும் வகையில், எடுத்து கூறப்பட்டு, கேட்கப்பட்டுள்ள போது, எதிரிகள் தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை மறுத்து, எரிர்வாதம் செய்ய விரும்புவதாக கூறினார்கள்.

4. இவ்விரு வழக்குகளிலும் அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 முதல் 3 வரையிலான சான்றுபொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. <u>அரசு தரப்பு வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சான்று பொருட்கள் வாயிலாக புலனாகும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u> :–**

5.1 இவ்வழக்கில் அ.சா.1 ராஜூ என்பவர் தான் திருப்பூர் வஞ்சிபாளையத்தில் குடியிருந்து கொண்டு டைல்ஸ் ஒட்டும் தொழில் செய்து வருவதாகவும், நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் வழக்கு சம்பந்தமாக என்ன தேதியில் என்ன நடந்தது என்று தனக்கு நினைவில்லை என்றும், எதிரிகளை தெரியுமா என்று கேட்டால் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.2 அ.சா.2 ராஜேஸ்வரி தனது சாட்சியத்தில் கடந்த 06.11.2010 ஆம் ஆண்டு 14.30 மணிக்கு மங்களம் காவல் நிலைய சிறப்பு காவல் ஆய்வாளரான சுவாமிநாதன் என்பவர் நிலையப் பொறுப்பில் இருந்தபோது உதயகுமார் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகார் – **அ.சா.ஆ.1** அடிப்படையில் மங்களம் காவல் நிலைய குற்ற எண் 2404/2010 சட்டபிரிவுகள் 147, 148, 324, 307 இ.த.ச.ன் படி முதல் தகவல் அறிக்கை – **அ.சா.ஆ.2** பதிவு செய்யப்பட்டு மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் ரமேஷ் குமார் என்பவரிடம் கோப்புகளை புலன் விசாரணைக்காக அனுப்பி வைத்ததாக சாட்சியமளித்துள்ளார். காவல் ஆய்வாளர் ரமேஷ் குமார், சம்பவ இடம் சென்று ஒன்று முதல் ஆறு சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், செந்தில் மற்றும் இளங்கோ என்ற சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மேற்படி காவல் ஆய்வாளர் ரமேஷ் குமார் வரைபடம்– **அ.சா.ஆ.4** வரைந்து, பார்வை மகஜர்– **அ.சா.ஆ.3** தயாரித்து அவர்களிடம் கையெழுத்தும் பெற்றதாகவும், அதே இடத்தில் சம்பவ இட சாட்சிகள் முன்னிலையில் நான்கு துண்டுகள் உடைந்த பாட்டில் – **சா.பொ.2** கைப்பற்றுதல் மகசர்–**அ.சா.ஆ.6** தயாரித்து கைப்பற்றியதாகவும், மேற்படி காவல் ஆய்வாளர் ரமேஷ் குமார் திருநெல்வேலிக்கு செல்லும் பேருந்து நிற்கும் பேருந்து நிலையத்தில் **1** முதல் **6** எதிரிகளை கைது செய்து சம்பவ இடம் அழைத்து வந்து முதல் எதிரி குமார் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம்– **அ.சா.ஆ.8** பெற்றதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் இளங்கோ மற்றும் கார்த்திகேயன்

என்ற இரண்டு சாட்சிகள் கையெழுத்து செய்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் எதிரியை அழைத்து சென்று அவர் எடுத்துக் கொடுத்த 19 சென்டி மீட்டர் கத்தி –சா.பொ.3 ஐ கைப்பற்றுதல் மகசர்– அ.சா.ஆ.5 மூலம் கைப்பற்றியதாகவும், மேற்படி காவல் ஆய்வாளர் ரமேஷ் குமார் அதன் பின் காயம்பட்ட சாட்சியான உதயகுமார் என்பவரிடமிருந்து ரத்தக்கரை படிந்த அவருடைய வேட்டி– சா.பொ.1 ஐ கைப்பற்றுதல் மகசர் –அ.சா.ஆ.7 மூலம் கைப்பற்றியதாகவும், காவல் ஆய்வாளர் ரமேஷ் குமார் இந்த வழக்கின் புலன் விசாரணையின் மத்தியில் வேறு ஒரு இடத்திற்கு மாற்றலாகி சென்று விட்ட காரணத்தினால் புலன் விசாரணையை தொடர்ந்து காவல் ஆய்வாளர் சலீம் என்பவர் நடத்தி வந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5.3. அ.சா.2 ராஜேஸ்வரி மேலும் தனது சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் சலீம், மருத்துவர் கேசவ மூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, உதயகுமார் மற்றும் இளையராஜா என்ற இருவருக்கும் காயச்சான்றிதழ்– அ.சா.ஆ.9 மற்றும் 9 ஐ பெற்றதாகவும், அதன் பின்பு புலன் விசாரணை முடிக்கப்பட்டு 17.12.2012 ஆம் தேதி அன்று இ.த.ச. பிரிவுகள் 147, 148, 307, r/w. 149 படி குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து, இவ்விரு அமர்வு வழக்குகளின் எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ)ன் கீழ் எதிரிகளிடம் வினவவில்லை. தங்களது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள், எனவே எதிரிகள் தரப்பு வாய்மொழி சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7. அமர்வு வழக்கு எண். 246–2023 வழக்கினை பொறுத்த வரையில், 2 ம் எதிரிக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 307–ன் கீழும், 4,5,6,8 மற்றும் 10 ம் எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 147, 148, 307 உ/இ. 149 ன் கீழும் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளும், அமர்வு வழக்கு எண். 61–2024 வழக்கினை பொறுத்த வரையில் அரசு தரப்பில் 1 மற்றும் 3 ம் எதிரிகளுக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 307 மற்றும் 307 உ/இ, 149–ன் கீழும், 9 ம்

எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 147, 148 307 உ/இ, 149–ன் கீழும் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளும் இந்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் தகுநிலை ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்து இந்நீதிமன்றத்தால் முடிவு காண வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

**<u>8.பிரச்சினைக்குரிய தீர்வு :–</u>**

8.1 இரு தரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

8.2 அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் தனது வாதத்தில் 2ம் எதிரிக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 307–ன் கீழும், 4,5,6,8 மற்றும் 10ம் எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 147, 148, 307 உ/இ. 149 ன் கீழும், 1 மற்றும் 3ம் எதிரிகளுக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 307 மற்றும் 307 உ/இ, 149–ன் கீழும், 9ம் எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 147, 148 307 உ/இ, 149–ன் கீழும் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்க அரசு தரப்பில் அசா.1 மற்றும் அசா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சாஆ.1 முதல் அ.சாஆ.10 வரையான சான்றாவணங்களும், சா.பொ.1 முதல் 3 வரையிலான சான்றுப் பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வாதிட்டு, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

8.3 மேற்படி வாதத்தை எதிர்த்து எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சி என கூறப்படும் இளையராஜா சாட்சியாக விசாரிக்கப்படவில்லை,. அதற்கு மாறாக, சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியாக ராஜு என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் அரசு தரப்பு வழக்கை ஆதரித்து சாட்சியமளிக்காததால் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு,

அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அதே போல, இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர்கள் ரமேஷ்குமார் மற்றும் சலீம் ஆகியோரைவ விசாரிப்பதை விடுத்து, அரசுத் தரப்பு அவர்களுக்கு கீழ் பணியாற்றியவரும், தற்போது திருப்பூர் மத்திய காவல் நிலைய ஆய்வாளராக பணியாற்றி வருகின்றவருமான திருமதி. ராஜேஸ்ரி என்பவரை விசாரித்து, அவர் ஆவணங்களின் அடிப்படையில் மட்டும் சாட்சிமளித்துள்ளார். பாதிக்கப்பட்ட இளையராஜாவுக்கு ஏற்பட்ட காயம் குறித்து நிரூபிக்கும் வகையில் அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் எவரும் விசாரிக்கப்படவில்லை. அ.சா.1 பாதிக்கப்பட்ட நபரான இளையராஜாவுக்கு ஏற்பட்ட காயம் குறித்து எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை . எதிரிகளை இந்நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்து அவர்கள் புரிந்த குற்றச்செயலுடன் தொடர்புபடுத்தியும் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. காயம் ஏற்படுத்த பயன்படுத்தப்பட்டதாக அரசுத் தரப்பில் கூறப்படும் ஆயுதம் எதையும் அ.சா.1 அடையாளம் காண்பிக்கவில்லை. எதிரிகள் எந்த ஆயுதங்களால் தன்னை தாக்கினார்கள் என்பது குறித்து அ.சா.1 ன் குறுக்கு விசாரணையில் கூட அவரிடம் கேள்வி ஏதும் அரசுத் தரப்பில் கேட்கப்படவில்லை. அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள ஆய்வாளர் வழக்கு விசாரணை விவரங்கள் குறித்து மட்டுமே சாட்சியமளித்துள்ளார். அவருடைய சாட்சியம் வேறு எந்த சாட்சிகளாலும் ஒத்துரைக்கப்படவில்லை. எனவே, இந்த வழக்கே சந்தேகத்திற்கிடமான வழக்கு என்றும் எனவே எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

8.4 இந்த நீதிமன்றம் அரசு தரப்பில் முன்னிலை படுத்தியுள்ள வாய்மொழி மற்றும் ஆவண சாட்சிகளையும் இரு தரப்பு வாதங்களையும் ஆராய்கையில் அசா.1 ராஜூ தனது முதல் விசாரனை சாட்சியத்தில், நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் வழக்கு சம்பந்தமாக என்ன தேதியில் என்ன நடந்தது என்று தனக்கு நினைவில்லை என்றும், எதிரிகளை தெரியுமா என்று கேட்டால் தெரியாது என்றும் மிகத் தெளிவாக சாட்சியமளித்துள்ளார். எதிரிகளுக்கு பாதகமான எந்த ஒரு நிகழ்வையும் அசா.1 குறிப்பாக சாட்சியத்தில் கூறவில்லை. மேலும் கண்ணுற்ற சாட்சியாக அரசுத் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள

அ.சா.1 ராஜு சம்பவம் நடந்த விதம் குறித்தோ, எந்தெந்த எதிரிகள் என்னென்ன குற்றச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்பது குறித்தோ, எந்த ஆயுதத்தால் இளையராஜாவின் உடலின் எந்த பாகத்தில் காயம் ஏற்படுத்தினார்கள் என்பது குறித்தோ, காயங்களின் தன்மை குறித்தோ, எதிரிகளை அடையாளம் காண்பித்தோ எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

8.5 மேலும் அரசுத் தரப்பில் கண்ணுற்ற சாட்சி மற்றும் தற்போதைய திருப்பூர் மத்திய காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர் ஆகியோரை தவிர மற்ற சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை. பட்டியலில் கண்ட சாட்சி 1 இறந்துவிட்டதாகவும், மற்ற சாட்சிகளின் முகவரிகளை கண்டறிய இயலவில்லை என்றும், அ.சா.1 பிறழ் சாட்சியாக மாறிவிட்ட காரணத்தினால் தற்போதைய புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கப்பட்டுள்ளதாகவும் அரசுத் தரப்பில் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. அ.சா.2 தற்போதைய புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் வாயிலாக, அ.சா.1 அளித்த புகார் /அ.சா.ஆ.1 ன்அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை / அ.சா.ஆ.2 பதிவு செய்யப்பட்டது குறித்தும், பார்வை மகசர் / அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் / அ.சா.ஆ.4 ஆகியவை தயாரிக்கப்பட்டது குறித்தும், 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் /அ.சா.ஆ.8 பெறப்பட்டது குறித்தும், அதனடிப்படையில் சா.பொ.1 முதல் 3 வரையிலான சான்றுப் பொருட்கள் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர்/அ.சா.ஆ.5 முதல் 7 மூலம் கைப்பற்றப்பட்டது குறித்தும், சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது குறித்தும், காயம்பட்ட இளையராஜாவின் விபத்துப் பதிவேட்டு நகல் மற்றும் காயச்சான்றிதழ்/ அ.சா.ஆ.9 மற்றும் அ.சாஈ.10 பெற்றது குறித்தும், எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியது குறித்தும், புலன் விசாரணை முடித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது குறித்தும் தெரிய வருகிறது. ஆனால், பார்வை மகசர், ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றில் சாட்சிக் கையொப்பமிட்ட சாட்சிகள் எவரும் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்டு, அ.சா.2 ன் சாட்சியம் ஒத்துரைக்கப்படவில்லை. அதே போல, காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த

மருத்துவர் எவரும் விசாரிக்கப்பட்டு, அவருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்கள் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன ஆயுதங்களால் ஏற்பட்டது என்றும், காயங்களின் தன்மை குறித்தும் நிரூபிக்கப்படவில்லை. சம்பவத்தை நேரில் பார்த்ததாக வேறு எந்த சாட்சியும் அரசுத் தரப்பில் விசாரிக்கப்படவில்லை.

8.6. அரசுத்தரப்பில் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சி எனக் கூறப்படும் அ.சா.1 ராஜூ அரசுத் தரப்பு வழக்கினை உறுதிப்படுத்தும் வகையில் சாட்சியம் அளிக்கத் தவறியுள்ள நிலையில், அரசுத் தரப்பு வழக்கு வலுவிழந்து விட்டதாகவே கருத இயலும். அ.சா.1 பிறழ் சாட்சியாக மாறிவிட்ட நிலையில், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் வேறு எந்த தனிநபர் சாட்சியின் சாட்சியமும் அரசுத் தரப்பில் முன்னிடப்படவில்லை. மேலும், அ.சா.1, 2 ஆகியோரின் குறுக்கு விசாரணையின் மூலமும் அரசுத் தரப்பில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் எவ்வித முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டதைப் போலவே, அ.சா.1 எதிரிகளையோ, அவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் ஆயுதங்களையோ இந்நீதிமன்றத்தில் அடையாளம் காண்பிக்கவில்லை. அ.சா.1 ஐ தவிர தனி நபர் சாட்சிகள் எவரையும் அரசுத் தரப்பில் விசாரிக்க முன்வராத நிலையில், புலன் விசாரணை குறித்து ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியமளித்துள்ள அ.சா.2 ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக் கொண்டு, எதிரிகள் குற்றவாளிகள் என முடிவு செய்ய இயலாது என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே, ஏற்கனவே இந்த நீதிமன்றம் கலந்துரையாடலில் குறிப்பிட்டுள்ளவாறு அரசுத்தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில், நிரூபிக்கவில்லை என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8.7 **அமர்வு வழக்கு எண். 246-2023**

இறுதியில், அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நிருபிக்கவில்லை என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளதால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, 2 ம் எதிரியின்

மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 307–ன் கீழும், 4,5,6,8 மற்றும் 10ம் எதிரிகளின் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 307 உ/இ. 149 ன் கீழும் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து குவிமுச 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. அ.சா.பொ.1 முதல் 3 வரையிலான சான்று பொருட்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு அல்லது மேல்முறையீடு செய்யப்படின், மேல்முறையீடு முடிவுற்ற பின் அழித்துவிட உத்தரவிடப்படுகிறது.

8.8. **அமர்வு வழக்கு எண். 61–2024**

இறுதியில், அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நிரூபிக்கவில்லை என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளதால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, 1 மற்றும் 3ம் எதிரிகளின் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 307 மற்றும் 307 உ/இ, 149–ன் கீழும், 9ம் எதிரியின் மீது பிரிவுகள் 147, 148 307 உ/இ, 149–ன் கீழும் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து குவிமுச 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. சான்று பொருட்கள் குறித்த உத்தரவு தாய் வழக்கான அமர்வு வழக்கு எண். 246/2023 வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பொதுத் தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

Dr.V.Sreevidya Digitally signed by Dr.V.Sreevidya Date: 2026.03.13 19:33:41 +0530

**முதன்மை உதவி அமர்வு நீதிபதி,**
**முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம்**
**திருப்பூர்.**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 09.03.2026 | ராஜூ – கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.2 | 09.03.2026 | ராஜேஸ்வரி, தற்போதைய காவல் ஆய்வாளர், மத்திய காவல் நிலையம், திருப்பூர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.2 | 06.11.2010 | புகார் |
| அ.சா.ஆ.2/அ.சா.2 | 06.11.2010 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3/அ.சா.2 | 06.11.2010 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4/அ.சா.2 | 06.11.2010 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5/அ.சா.2 | 06.11.2010 | கைப்பற்றுதல் மகசர் (சா.பொ.3) |
| அ.சா.ஆ.6/அ.சா.2 | 06.11.2010 | கைப்பற்றுதல் மகசர் (சா.பொ.2) |
| அ.சா.ஆ.7/அ.சா.2 | 06.11.2010 | கைப்பற்றுதல் மகசர் (சா.பொ.1) |
| அ.சா.ஆ.8/அ.சா.2 | 06.11.2010 | 1ம் எதிரி முத்துக்குமாரின் ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.9/அ.சா.2 | 06.11.2010 | இளையராஜாவின் விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.10/அ.சா.2 | 21.11.2010 | இளையராஜாவின் காயச்சான்றிதழ் |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்** :

| | |
|---|---|
| சா.பொ.1/அ.சா.2 | இரத்தக்கரை படிந்த வேட்டி |
| சா.பொ.2/அ.சா.2 | பீர் பாட்டில் நான்கு துண்டுகள் |
| சா.பொ.3/அ.சா.2 | கத்தி |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்கள் :** இல்லை

Dr.V.Sreevidya

Digitally signed by Dr.V.Sreevidya
Date: 2026.03.13 19:33:56 +0530

**முதன்மை உதவி அமர்வு நீதிபதி,**
**முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம்**
**திருப்பூர்.**

வரைவு / நேரிய / நகல் பொதுத் தீர்ப்புரை
அமர்வு வழக்கு எண். 246/2023
மற்றும்
அமர்வு வழக்கு எண். 61/2024
நாள் 13/03/2026
மு.உ.அ. நீதிமன்றம், திருப்பூர்